## மே – 18 – சனி

### புனித முதலாம் யோவான் - திருத்தந்தை, மறை சாட்சி

“ஆண்டவர் தம் மீட்பைஅறிவித்தார். பிற இனத்தார் கண்முன்னே தம் நீதியை வெளிப்படுத்தினார்” – திபா 98 : 2

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி13 : 44 – 52

அடுத்து வந்த ஓய்வுநாளில் ஆண்டவரின் வார்த்தையைக் கேட்க ஏறக்குறைய நகரத்தார் அனைவரும் கூடிவந்தனர்.மக்கள் திரளைக் கண்ட யூதர்கள் பொறாமையால் நிறைந்து, பவுல் கூறியதை எதிர்த்துப் பேசி அவரைப் பழித்துரைத்தார்கள்.பவுலும் பர்னபாவும் துணிவுடன், ”கடவுளின் வார்த்தையை உங்களுக்குத் தான் முதலில் அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனால் நீங்கள் அதனை உதறித் தள்ளி நிலைவாழ்வுக்குத் தகுதியற்றவர்கள் என்று உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக் கொண்டீர்கள். எனவே நாங்கள் பிற இனத்தாரிடம் செல்லுகிறோம்.ஏனென்றால், ”உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தார்க்கு ஒளியாக ஏற்படுத்துவேன்” என்று ஆண்டவர் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்” என்று எடுத்துக் கூறினார்கள்.இதைக் கேட்ட பிற இனத்தார் மகிழ்ச்சியடைந்தனர் ஆண்டவரின் வார்த்தையைப் போற்றிப் புகழ்ந்தனர். நிலைவாழ்வுக்காகக் குறிக்கப்பட்டோர் அனைவரும் நம்பிக்கை கொண்டனர்.அப்பகுதியெங்கும் ஆண்டவரின் வார்த்தை பரவியது.ஆனால் யூதர்கள் கடவுளை வழிபட்டு வந்த மதிப்புக்குரிய பெண்களையும் நகரின் முதன்மைக் குடிமக்களையும் தூண்டிவிட்டு, பவுலையும் பர்னபாவையும் இன்னலுக்குள்ளாக்கி, அவர்களைத் தங்களது நாட்டிலிருந்து துரத்திவிட்டார்கள்.அவர்கள் தங்கள் கால்களில் படிந்திருந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிவிட்டு இக்கோனியாவுக்குச் சென்றார்கள்.சீடர்களோ தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள்.

**பதில்பாடல்:** மாந்தர் அனைவரும் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

### நற்செய்தி : யோவான் 14 : 7 – 14

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கி, ”நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டுமிருக் கிறீர்கள்” என்றார். அப்போது பிலிப்பு, அவரிடம், ”ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும் அதுவே போதும்” என்றார். இயேசு அவரிடம் கூறியது. ”பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். அப்படியிருக்க, ”தந்தையை எங்களுக்குக் காட்டும்” என்று நீ எப்படிக் கேட்கலாம்? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்துகொண்டு செயலாற்றுபவர் தந்தையே.

நான் தந்தையுள் இருக்கிறேன் தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள் என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார் ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார். ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார். நீங்கள் என் பெயரால் எதை கேட்டாலும் செய்வேன்” என்றார்.

**தியானம் :** இன்று அன்னையாம் திரு அவையோடிணைந்து திருத்தந்தையர்களில் ஒருவரான முதலாவது யோவான் திருத்தந்தையை நினைவு கூருகிறோம், திருத்தந்தை முதலாவது யோவான் “நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார்”என்ற இயேசுவின் உறுதி மொழிக்கிணங்க நற்செய்திக்குச் சாட்சியாக வாழ்ந்துள்ளார் என்பது வெள்ளிடை மலை. நற்செய்தியில் எமது இரட்சகர் இயேசு பரலோகதகப்பனுடன் தமக்குள்ள நெருக்கமான உறவு போன்று எமக்கும் நெருக்கமான உறவு இருக்கவேண்டுமென விரும்புகிறார். கிறிஸ்துவின் சக்திமிக்க இவ்வாசகங்கள் சாதாரன கிறிஸ்தவர்களான எமது உங்களிலும் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் உண்டாக்க முடியாதா? மீட்பர் இயேசுவினூடாக எமது பரலோகதகப்னோடு நெருக்கமான உறவுவைப்பது இவ்வுலகில் கிறிஸ்தவனாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள இலவசகொடையாகும். இந்த இலவசக் கொடையினை பரிசுத்த ஆவியானவர் திருவருட்சாதனங்கள் வழியாக எமக்கு வழங்கியுள்ளார். எனினும் பாவியான நானுமா? என்ற வினாவிற்கு “என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்” என நற்செய்தியில் இறைமகன் இயேசு பதில் தருகின்றார். இயேசுவின் வல்லமையில் நம்பிக்கையேரடு அவரை எனது சொந்த இரட்சகராக (மீட்பராக) ஏற்று எனது பழைய பாவப்பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட நான் ஏன் தயங்கவேண்டும்? ஏனெனில் கிறிஸ்து இயேசு தனது சீடர்களைத் தெரிவு செய்தபோது அவர்களைத் தொழில், படிப்பு, அந்தஸ்து எனத் தகுதிகளை அடிப்படையாக முன்வைக்கவில்லை. முாறாக, சாதாரன வாழ்க்கை வாழ்ந்தவர்களையே தமது சீடர்களாகப் “பின்செல்”லுமாறு அழைத்தார். அச்சீடர்களும் கிறிஸ்துவைப் பின்பற்றியது மட்டுமல்ல தமது உயிரையும் கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்துள்ளார்கள். திருமுழுக்கு அருட்சாதனங்கள் வழியாக நாமும் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழவும், எம்மை நாமே ஆராய்ந்து பார்க்கவும் நற்செய்தி அழைக்கின்றது. இதுவே இவ்வுலகில் நாம் செய்யக்கூடிய“அரும் பெரும்செயல்” என புதியஉத்தானமாக, புது வாழ்வாக எம்மில் மாற்றம் பெறட்டும்.